# கொழும்புப் பல்கலைக்கழகம் - இலங்கை

கலைப்பீடம்

## சிறப்புக் கலை / கற்கைப் பிரிவுக் கலைமாணிப் பரீட்சை புவியியல் - பகுதி I

முதலாம் பருவ இறுதித் தவணைப் பரீட்சை – 2018/2019

## GYG 2133 – இலங்கையின் பௌதிகச் சூழல்

நேரம்: 02 மணித்தியாலம்

மூன்று (03) வினாக்களுக்கு மட்டும் விடை தருக.
இலங்கைப் புறவுருவப் படம் ஒன்று வழங்கப்படும்

---

1. i. இலங்கையின் நிலத்தோற்ற உருவாக்கம் பற்றிய கருத்துக்களை விருத்திசெய்த ஆய்வாளர் இருவரின் பெயர்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

   ii. வினா இல 1.i. இல் உம்மால் குறிப்பிடப்பட்ட ஆய்வாளர்களில் ஒருவரினைத் தெரிவுசெய்து, அவர் இலங்கையின் நிலத்தோற்ற உருவாக்கம் தொடர்பாக விருத்திசெய்த கருத்துக்களைச் சுருக்கமாக விளக்குக. (04 புள்ளிகள்)

   iii. மேலே குறிப்பிட்ட கருத்தினை உறுதிப்படுத்துவதற்கு முன்வைத்த ஆதாரங்களைச் சுருக்கமாக விளக்குக. (06 புள்ளிகள்)

   iv. "இலங்கையின் நிலத்தோற்ற உருவாக்கம் பற்றிய கருத்துக்கள் சவால்களிற்கு உட்பட்டிருந்ததுடன் படிப்படியான மாற்றத்திற்கும் உள்ளாகி வருகின்றது" இக்கூற்றினை ஆராய்க. (08 புள்ளிகள்)

2. i. இலங்கையின் நிலத்தோற்றத்தின் மீது செயற்படும் பிரதான இரண்டு உரிவுக் கருவிகளைப் (Agents) பெயரிடுக. (02 புள்ளிகள்)

   ii. வினா இல 2.i இல் குறிப்பிட்ட கருவிகளுள் ஒன்றினது அரிப்புச் செயன்முறையினைச் சுருக்கமாக விளக்குக. (04 புள்ளிகள்)

   iii. வினா இல 2.ii. இல் குறிப்பிட்ட கருவியினால், இலங்கையின் நிலத்தோற்றத்தின் மீது உருவாக்கப்பட்டுள்ள தின்னல் நிலவுருவங்களின் பண்புகளைச் சுருக்கமாக ஆராய்க. (06 புள்ளிகள்)

   iv. "நிலத்தோற்றங்களின் உருமாற்றம் எப்பொழுதும் உரிவுகளிலேயே தங்கியுள்ளது" இக் கூற்றினை விமர்சன ரீதியில் ஆராய்க (08 புள்ளிகள்)

3. i. இலங்கையின் வானிலை மற்றும் காலநிலை நிலைமைகளைத் தீர்மானிக்கும் பூகோளக் காரணிகள் யாவை? (02 புள்ளிகள்)

   ii. மேற்குறிப்பிட்ட காரணிகளில் ஏதேனும் ஒன்றினைத் தெரிவு செய்து, இலங்கையின் வானிலை மற்றும் காலநிலை நிலைமைகளில் அதன் செல்வாக்கினை விவரிக்குக. (04 புள்ளிகள்)

   iii. இலங்கையின் மழைவீழ்ச்சிப் பாங்கில் அயன அயல் ஒருங்கல் வலயம் (ITCZ) எவ்வாறு செல்வாக்குச் செலுத்துகின்றதன்பதைச் சுருக்கமாக விளக்குக. (06 புள்ளிகள்)

   iv. "இலங்கையின் வானிலை மற்றும் காலநிலையில் பிராந்தியக் காரணிகள் மாத்திரமன்றி உள்ளூர்க் காரணிகளும் கணிசமான தாக்கத்தினைக் கொண்டிருக்கின்றன" இக் கருத்தினைத் தக்க உதாரணங்களுடன் சுருக்கமாக ஆராய்க (08 புள்ளிகள்)

4. i. நீர் வள முகாமைத்துவம் என்றால் என்ன? (02 புள்ளிகள்)

   ii. நீர் வள முகாமைத்துவத்தில் தாக்கம் செலுத்தும் சூழலியல் காரணிகளைக் குறிப்பிடுக (04 புள்ளிகள்)

   iii. இலங்கையில் காணப்படும் பல்நிலைக் குளத்தொகுதி அல்லது அடுக்குநிலைக் குளத்தொகுதியின் (Tank Cascade System) பிரதான அம்சங்களை வரைபடங்களுடன் ஆராய்க. (06 புள்ளிகள்)

   iv. இலங்கையில் முன்னெடுக்கப்படும் பல்நோக்கு அபிவிருத்திச் செயற்றிட்டங்களுடன் (Multi-Purpose Development Project) இணைந்து காணப்படும் சூழலியல் தாக்கங்களைப் பரிசீலிக்குக. (08 புள்ளிகள்)

5. i. இலங்கையில் உள்ள நான்கு கனிய வளங்களைப் பெயரிடுக. (02 புள்ளிகள்)

   ii. மேற்குறிப்பிட்ட கனிய வளங்களின் இடம்சார் பரம்பற் பாங்கினைச் சுருக்கமாக விவரிக்குக. (04 புள்ளிகள்)

   iii. இலங்கையில் காணப்படும் கனிய வளங்களின் சிறப்பியல்புகளை உதாரணங்களைப் பயன்படுத்தி ஆராய்க. (06 புள்ளிகள்)

   iv. இலங்கையின் கனியவள அகழ்வு நடவடிக்கைகளுடன் இணைந்து காணப்படும் சூழலியல் தாக்கங்களைப் பொருத்தமான உதாரணங்களுடன் ஆராய்க. (08 புள்ளிகள்)

6. i. இலங்கையின் ஈரநில சூழல் தொகுதிகளில் (wetland Ecosystem) பரம்பிக் காணப்படும் நான்கு படையெடுக்கும் அந்நியநாட்டு இனங்களைப் (Invasive Alien Species / IAS) பெயரிடுக. (02 புள்ளிகள்)

   ii. இலங்கையில் இனங்காணப்பட்டுள்ள படையெடுக்கும் அந்நியநாட்டு இனங்களின் பண்புகளைக் குறிப்பிடுக (04 புள்ளிகள்)

   iii. வினா இல 6.i. இல் குறிப்பிட்ட இனங்களில் ஒன்றினைத் தெரிவுசெய்து அதன் ஆக்கிரமிப்பினால் ஏற்படும் தாக்கங்களை உதாரணங்களுடன் சுருக்கமாக ஆராய்க. (06 புள்ளிகள்)

   iv. படையெடுக்கும் அந்நியநாட்டு இனங்களின் தாக்கத்தினைக் கட்டுப்படுத்தும் முகமாக முன்னெடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளைப் பரீட்சிக்குக. (08 புள்ளிகள்)

••••••••••••••••••••